சென்றுதான் அறுவை சிகிச்சை செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அங்கே எல்லா வசதிகளும் இருந்தும்கூட, அறுவை சிகிச்சை செய்யாத காரணத்தினாலே அமைச்சரவர்கள் அதிலே கவனம் செலுத்தி, அங்கேயே ஆப்பரேஷன் செய்வதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா ? அங்கே வருகின்ற டாக்டர்களெல்லாம் வெளியூரிலேயிருந்து வருகின்ற காரணத்தினாலே அங்கே தங்குவது கிடையாது. ஆகவே, அங்கேயே தங்கி சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுப்பாரா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனஸ்தடிஸ்ட் இல்லாமல் ஒருவேளை அறுவை சிகிச்சை செய்யாமல் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. பக்கத்திலே யாராவது அனஸ்தடிஸ்ட் இருந்தால் அவர்களை மாற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். மருத்துவர்கள் அங்கே தங்காமல் இருந்தால் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். காரணம், அது ஒரு பெரிய அளவிலே இருக்கின்ற ஊர். நகராட்சியாக இருக்கிறது. வீடு கிடைப்பதிலே எந்தப் பிரச்சினையும் இருக்காது. எனவே, அங்கே மருத்துவர்கள் தங்காமல் வெளியூரிலேயிருந்து வந்தால் நிச்சயமாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 163, திரு. மு. வெங்கடராம ரெட்டி, இருக்கையில் இல்லை. திரு. கே. ஏ. மனோகரன்......

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, நான்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பக்கத்து ஊர்க்காரர் இருக்கிறார். அவர் கேட்பார். திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

163—

உரிகம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**35761*—திரு. மு. வெங்கடராம ரெட்டி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், உரிகம் ஊராட்சிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைக்கின்ற சாத்தியக்கூறு இல்லை.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உரிகம் பகுதியானது அடர்ந்த அஞ்ஜெட்டி காட்டினுடைய நடு மத்தி மையம். மையமான பகுதி. அங்கே நிறைய மலைவாழ் மக்கள் எல்லாம் இருக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையோ அல்லது துணை சுகாதார நிலையத்தையோ அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அந்த ஒன்றியத்திலே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மக்கள் தொகை அடிப்படையிலே அது போதுமானதாக இருக்கிறது என்றுதான் நான் இல்லை என்று சொன்னேன். துணை சுகாதார நிலையம் இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, அதைப்பற்றி அரசு தனியாக ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் வேறு எந்தப் பகுதியிலேயாவது புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றி ஐந்தாம் தேதி வருகிற டிமாண்டிலே விளக்கமாகச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 164, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

164—

ஆசனாம்பட்டு ஏரியைப் புதுப்பித்தல்

***21512**—திரு. கி. தருமலிங்கம் :*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—